# செப்டம்பர் – 21 – வெள்ளி

### திருத்தூதர் நற்செய்தியாளர் புனித மத்தேயு

### ஒவ்வொரு பகலும் அடுத்த பகலுக்கு அச்செய்தியை அறிவிக்கின்றது: திபா. 19:2

## முதல் வாசகம் : எபேசியர் 4 : 1 – 7, 11 - 13

சகோதர சகோதரிகளே நீங்கள் எங்களைக் கிறிஸ்துவின் ஊழியர்கள், கடவுளின் மறை உண்மைகளை அறிவிக்கும் பொறுப்புடையவர்கள் எனக் கருதவேண்டும். பொறுப்பாளர்கள் நம்பிக்கைக்குரியவர்களாய்க் காணப்படவேண்டும் என எதிர்பார்க்க லாம் அன்றோ! என்னைப் பொறுத்தமட்டில் எனக்கு எதிராக நீங்களோ மக்களின் நீதிமன்றமோ தீர்ப்பளித்தால் அதைப்பற்றிச் சிறிதும் கவலைப்படமாட்டேன். எனக்கு நானே தீர்ப்பளித்துக் கொள்ளவும் மாட்டேன். எனக்கு எதிராகக் குற்றம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆயினும் நான் குற்றமற்றவனாகி விடமாட்டேன். எனக்குத் தீர்ப்பு வழங்குபவர் ஆண்டவர் ஒருவரே. எனவே, குறித்தகாலம் வருமுன், அதாவது ஆண்டவரின் வருகைக்குமுன் யாருக்கும் தீர்ப்பளிக்க வேண்டாம். அவரே இருளில் மறைந்திருப்பவற்றை வெட்டவெளிச்சமாக்குவார் உள்ளங்களின் நோக்கங்களையும் வெளிப்படுத்துவார். அப்பொழுது ஒவ்வொருவரும் கடவுளிடமிருந்து பாராட்டுப்பெறுவர். சகோதர சகோதரிகளே, உங்கள்பொருட்டு என்னையும் அப்பொல் லோவையும் எடுத்துக்காட்டாகக் கொண்டு இவற்றைக் கூறினேன். ஏனெனில் ”எழுதியுள்ளதற்கு மேல்போகாதே” என்பதின் பொருளை எங்களைப் பார்த்துக் கற்றுக்கொள்ளுங்கள். ஒருவரை ஆதரித்தும் மற்றவரை எதிர்த்தும் செயல்படாதீர்கள் இறுமாப்புக் கொள்ளாதீர்கள். நீங்கள் மற்றவர்களைவிட உயர்ந்தவர்கள் என்று சொன்னவர் யார்? உங்களிடம் உள்ள அனைத்தும் நீங்கள் பெற்றுக்கொண்டவை தானே? பெற்றுக்கொண்டும் பெற்றுக்கொள்ளா ததுபோல் பெருமை பாராட்டுவது ஏன்? இந்நேரம்வரை பட்டினி யோடும் தாகத்தோடும் ஆடையின்றியும் இருக்கிறோம். அடிக்கப்படுகிறோம் நாடோடிகளாய் இருக்கிறோம். எங்கள் கைகளால் பாடுபட்டு உழைக்கிறோம். பழிக்கப்படும்போது ஆசி கூறுகிறோம் துன்புறுத்தப்படும்போது பொறுத்துக் கொள்கிறோம். அவமதிக்கப்படும்போதும் கனிவாகப் பேசுகிறோம். நாங்கள் உலகத்தின் குப்பை போலானோம். இதுவரை அனைத்திலும் கழிவுப்பொருட்கள் எனக் கருதப்பட்டு வருகிறோம்.

**பதில்பாடல்:** படைப்புக்களின் அறிக்கை உலகெங்கும்
சென்றடைகின்றது.

## நற்செய்தி : மத்தேயு 9 : 9 – 13

அக்காலத்தில் மத்தேயு என்பவர் சுங்கச்சாவடியில் அமர்ந்திருந் ததை இயேசு கண்டார் அவரிடம், ”என்னைப் பின்பற்றிவா” என்றார். அவரும் எழுந்து இயேசுவைப் பின்பற்றிச் சென்றார். பின்பு அவருடைய வீட்டில் பந்தியில் அமர்ந்திருந்தபோது வரி தண்டுபவர்கள், பாவிகள் ஆகிய பலர் வந்து இயேசுவோடும் அவருடைய சீடரோடும் விருந்துண்டனர். இதைக்கண்ட பரிசேயர் அவருடைய சீடரிடம், ”உங்கள் போதகர் வரிதண்டுபவர்களோடும் பாவிகளோடும் சேர்ந்து உண்பது ஏன்?” என்று கேட்டனர். இயேசு இதைக் கேட்டவுடன், ”நோயற்றவர்க்கு அல்ல, நோயுற்றவர்க்கே மருத்துவர் தேவை. ”பலியை அல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன்” என்பதன் கருத்தை நீங்கள் போய்க் கற்றுக் கொள்ளுங்கள் ஏனெனில் நேர்மையாளரை அல்ல, பாவிகளையே அழைக்க வந்தேன்” என்றார்.

**தியானம்:** இன்று நற்செய்தியாளரும் திருத்தூதருமான புனித மத்தேயுவின் விழாவைக் கொண்டாடுகிறோம். அவருடைய அழைப்பையும், நற்செய்தி அறிவைப்பையும் இன்று நினைவு கூர்ந்து அவருக்காக இறைவனைப் போற்றுவோம். மத்தேயு சுங்கச்சாடியில் வரி தண்டுபவராகப் பணியாற்றியவர் பாவியென கருதப்பட்டவர் இருப்பினும் அவரையும் இயேசு தம் சீடருள் ஒருவராக அன்புடன் தேர்ந்து கொண்டார். நேர்மையாளர்களை அல்ல பாவிகளையே அழைக்கவந்தேன் என்று அறிக்கையிட்டார். அந்த அழைப்பை ஏற்றுக்கொண்ட மத்தேயு தகுதியுள்ளவராக வாழ்ந்தார். நற்செய்தியாலும், வார்த்தையாலும், எழுத்தினாலும் அறிவித்தார். இன்றும் அவர் எழுதிய நற்செய்தி நம்மத்தியில் உள்ளது. நமது அழைப்பும், அறிவுப்பும் எப்படிப்பட்டது என்பதைப் பற்றி சிந்திப்போம். நாம் பாவிகளாய் இருந்த போதே நம்மை அழைத்த இறைவனுக்கு நன்றி கூறுவோம். அவர் அழைப்பை ஏற்று நற்செய்தியாளர்களாய் வாழ்வோம். நமது வாழ்வே ஒரு நற்செய்தியாய் அமையட்டும். நம்மையும் நம் பணியையும் பார்ப்பவர்கள் இயேசுவின் மதிப்பீடுகளை நம்மிடமிருந்து கற்றுக் கொள்ளட்டும். இதுவே நம்மேல் சுமத்தப்பட்ட கடமை என்று ஏற்றுக் கொள்வோம். ஆமென்